www.tamilarangam.net

19.1..97

கிண்ணம்: 8 எண்ணம்: 1



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

KINDER LITERARISCHES MAGAZIN.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சப்பாத்து

சப்பாத்துகளில் (காலணிகள்) தான் எத்தனை வகைகள். விதம் விதமாக நவீன வடிவங்கள். தொடக்க காலத்தில் மனிதன் கால்களில் முட்கள், கற்கள், காயப்படுத்தாமல், கடினமான மிருகத்தோலைக் கால்களில் சுற்றிக் கட்டிக் கொள்ளப் பழகியிருந்தான். பின் மரத்தினாலான காலணிகள் உருவாக்கி அணிந்தான். இன்றும் துறவிகள் இக் காலணிகள் அணிந்திருப்பதைக் காணலாம். காலமாற்றங்களில் காலணிகள் பலவித உருப்பெற்று இன்று மனிதர்களின் இன்றியமையாததொன்றாகி விட்டன.

கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளில் சப்பாத்துக்கள் மத்திய கிழக்கிலிருந்து ஐரோப்பாவிற்கு அறிமுகப் படுத்தப்பட்டது. இவை மிருதுவான தோலினால் செய்யப்பட்டவை. சப்பாத்தின் முன்பக்கம் கூர்மையாக வளைந்து காணப்பட்டது. தற்காலச் சப்பாத்துக்கள் உருவத்துக்கு முன்மாதிரியானவை இவைதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சப்பாத்துக்களை அணிந்து கொள்வதில் அக்கறையோடு முனைத்தவர்கள் ரோமன் நாட்டினரே. தங்கள் தங்கள் தகுதிக்கேற்ப சப்பாத்துக்களை அணிந்து கொண்டனர்.

தொடக்க காலத்தில் ஐரோப்பியர்கள், சப்பாத்துக்களின் முனையை மிகவும் நீளமாக வைத்துக் கொண்டனர். அதுவே அன்றைய நாகரீகமாகி விட்டிருந்தது. வால் போல நீண்டிருந்த முன் முனைகளால் தடக்கி விழுந்தவர்கள் ஏராளம். ஆனாலும் அது அன்றைய நாகரீகமாக இருந்தது. பிற்பாடு இதே வால்களை முன்புறமாக வளைத்து முழங்கால்களுடன், அல்லது இடுப்பிலோ கட்டிக் கொண்டனர். இந்த நாகரீகம் கிட்டத் தட்ட நானூறு ஆண்டுகள் வரை நீடித்திருந்தது.



14ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் மூன்றாம் எட்வேட் மன்னர் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார். பொதுமக்கள்


www.tamilarangam.net

அணியும் சப்பாத்து முனைகள் 5 செ.மீற்றருக்கு மேல் நீளமாக இருக்கக்கூடாது என்றும், செல்வந்தர்களே நீளமான முனைகள் கொண்ட சப்பாத்துக்கள் அணிந்து கொள்ளலாம் என்பதே அச் சட்டம். கி.பி 1500 அளவில் 8ம் ஹென்றி ஒருவகைக் காலணிகளை அறிமுகம் செய்தார்.

முன் பக்கத்தை அகலமாக்கி அதற்குள் கம்பளி, தலைமுடி, வைக்கோல் போன்றவற்றை வைத்துத் தைத்து, பலவித வடிவங்களில் இச்சப்பாத்துக்ள் செய்யப்பட்டன. இச்சப்பாத்துகள் கால்களில் வீக்கத்தைக் கொண்டு வந்தன. இதற்கும் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. 15 செ.மீற்றருக்கு மேல் அகலம் இருக்கக் கூடாதென்பதே அந்தச் சட்டமாகும். 17ம் நூற்றாண்டின் பின்னர் துரிதமான வளர்ச்சியைச் சப்பாத்துகள் கண்டன.

குளிர் காலங்களில் அணியக் கூடிய சப்பாத்துகள் (முழங்கால் வரை, அல்லது முழங்கால்களை மூடக்கூடிய தன்மையில்) வெப்ப காலத்துக்கேற்ற சப்பாத்துகள், அழகான லேஸ்கள் பின்னப்பட்ட சப்பாத்துகள் உருவாயின. 16ம் நூற்றாண்டுப்

www.tamilarangam.net



பெண்கள் 6 செ.மீற்றர் உயரமான கால்களை மூடாத வகையில் வார்களால் இறுகக் கட்டிக் கொண்ட சப்பாத்துகள் அணிந்தனர். நொண்டிக் குதிரை ஆட்டத்துக்கு அணிவது போன்றது இது.

பிரான்ஸ் மன்னர் 16ம் லூயி கட்டையானவர். இதனால் குதிக்கால் உயரம் கூடியதான சப்பாத்துகளைச் செய்யக் கட்டளையிட்டார். இவ்வாறு சப்பாத்துகள் வளர்ச்சியைப் பெற்றன. இன்றோ படுக்கையறைக் காலணி, விளையாடும் போது பாவிக்கும் ஸ்போட்ஸ் சப்பாத்துக்கள், வீட்டுக்குள் பாவிக்க, வெளியே செல்ல, எத்தனை எத்தனை வகைகளில் சப்பாத்துகள் காணப்படுகின்றன.

www.tamilarangam.net

# மகா பாரதம்



அரச குமாரர்கள் இருவரும் தங்கள் மனைவியரோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள். வசந்தகாலம் வந்தது. கானக வாழ்க்கைக்கு விரும்பிய பாண்டு தன் மனைவியரை அழைத்துக் கொண்டு கானகத்திற்குச் சென்றான். திருதராஷ்டினனுக்குத் துரியோதனன் என்னும் மகன் பிறந்தான். பாண்டுவுக்குக் குழந்தைகள் இல்லை. இதனால் பாண்டு கவலையோடு வாழ்ந்து வந்தான்.

குந்திதேவிக்கு இது பெரிதும் வேதனையாக இருந்தது. இதை விடவும் தான் பெற்றெடுத்த முதல் மகன் எங்கே? எப்படி இருப்பான்? என்கிற வேதனையும் இடையிடையே வந்தது. எப்படி என்றாலும் பாண்டுவின் கவலையைப் போக்க எண்ணினாள். துருவாச முனிவர் சொல்லிக் கொடுத்த மந்திரங்களில் ஒன்றை மட்டுமே தான் பயன் படுத்திக் கொண்டது ஞாபகத்திற்கு வந்தது.

www.tamilarangam.net

அந்த மந்திரங்களில் ஒவ்வொன்றாக மூன்று மந்திரங்களை உச்சரித்தாள். அவள் முன்னே யமன்(தர்மதேவன்), வாயு(காற்றுக் கடவுள்), இந்திரன் (தேவர்களின் தலைவன்) ஆகிய மூவரும் தோன்றினார்கள். குந்திக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. முதல் குழந்தை உதிஷ்டிரன், இரண்டாவது குழந்தை வீமன், மூன்றாவது குழந்தை அருச்சுனன் என்று பெயர் பெற்றனர். மாத்ரி தேவிக்குத் தனக்குத் தெரிந்த கடைசி மந்திரத்தைக் குந்தி சொல்லிக் கொடுத்தாள்.

மாத்ரியும் அந்த மந்திரத்தை உச்சரித்தாள். இரட்டையர்களான அச்சுவினி தேவர்கள் வந்தார்கள். அவளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. நகுலன், சகாதேவன் என்று இருவரும் பெயர் பெற்றனர். இதே வேளையில் அரண்மனையில் திருதராஷ்டிரனுக்கு நூறு குழந்தைகள் பிறந்தார்கள். பாண்டுவின் குழந்தைகள் பாண்டவர்கள் என்றும், திருதராஷ்டிரனின் குழந்தைகள் கௌரவர்கள் என்றும் அழைக்கப் பட்டனர்.

குந்திதேவியால் அனாதையாய் கங்கை ஆற்றில் விடப்பட்ட குழந்தையை அஸ்தினாபுரத்துத் தேர்ச்சாரதியான அதிரதனும் மனைவியும் கண்டெடுத்து வளர்த்து வந்தனர். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லாமல் இருந்ததால் அவர்கள் அக்குழந்தைக்குக் கர்னன் என்று பெயரிட்டு, தம் சொந்தக் குழந்தையைப் போலவே வளர்த்து வந்தார்கள். அரச குலத்தவனான கர்னன், தன் பிறப்பின் இரகசியம் அறியாமலேயே, தேரோட்டி மகன் என்று வளர்ந்து வந்தான். கர்னன் மட்டுமல்ல! யாருமே அவன் பிறப்பை அறிந்திருக்கவில்லை.

-தொடரும்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருப்பாயே!



உதவி தேவைப் படுவோர்க்கு
உன்னால் முடிந்தால் செய்வாயே!
உதவி செய்யாதிருந்தாலும்
ஊறு விளைக்கா திருப்பாயே!

வேலை கேட்டு வருவோர்க்கு
விருப்பம் இருந்தால் கொடுப்பாயே!
வேலை கொடுக்கா திருந்தாலும்
வேலையைக் கெடுக்காதிருப்பாயே!

உணவு கேட்டு வருவோர்க்கு
உண்பதில் கொஞ்சம் கொடுப்பாயே!
உணவைக் கொடுக்காதிருந்தாலும்
உண்பதைத் தடுக்காதிருப்பாயே!

நல்ல கருத்தை மக்களுக்கு
நாளும் உரைத்து வருவாயே!
நல்லதை உரைத்திடா விட்டாலும்
நலங்கெட உரைத்திடா திருப்பாயே!


-கோகுலம்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீதி கிடைக்குமா?




தாரா மெதுவாகக் குளத்தில் நீந்திக் கொண்டிருந்தது. தாராவைச் சாப்பிடுவதற்கு நீண்ட நாட்களாக நரிக்கு ஆசை. நரியும் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தது. "இன்று அந்நாள் தானோ" என எண்ணியவாறு நரி குளத்தை அண்டியுள்ள பற்றைக்குள் ஒளிந்திருந்தது. திடீரென்று "சகோதரி தாராவே" என்று கூப்பிட்டது. தாரா எங்கிருந்து சத்தம் வருகின்றது என்று சுற்றும் முற்றும் பார்த்தது. நரி பற்றைக்குள் இருந்து வருவதைத் தாரா கண்டது.

தாரா "ஓ, நரியண்ணே! என்ன?" என்றது. அதற்கு நரி "சகோதரி தாராவே, இன்று நீ என்னுடையவள். என்னுடைய குளத்தில் நீந்திக் கொண்டிருக்கிறாய். நான் உன் கழுத்தைத் திருகி மெல்லமெல்ல உண்ணப் போகிறேன்." என்று கூறியது. அதற்குத் தாரா "நானும் இந்தச் சுற்றாடலில் தான் வாழ்கிறேன். எனக்கும் இக்குளத்தில்

www.tamilarangam.net

நீந்துவதற்கு உரிமை உண்டு. உனக்கு எவ்வளவு உரிமை உண்டோ, அதேயளவு உரிமை எனக்கும் உண்டு. நீதிமன்றம் சென்று எங்கள் பிரச்சனையைக் கூறுவோம். அவர்கள் என்ன தீர்ப்புச் சொல்கிறார்களோ அதன்படி நடந்து கொள்ளுவோம்" என்றது.

இரண்டும் நீதிமன்றம் சென்றன. நீதிமன்றம் சென்ற தாராவுக்கோ ஒரே அதிர்ச்சி. அங்கு நரியார் நீதிபதியாக வீற்றிருந்தார். ஒருமுறை வழக்கறிஞர் பக்கம் தலையைத் திருப்பிப் பார்த்தது. அங்கு வழக்கறிஞர்கள் எல்லோரும் நரிகளாகவே காணப்பட்டது. யூரிமார்களும் நரிகளே. அங்கு நரிக் கூட்டம் ஒன்றே நாக்குகளைத் தொங்கப் போட்டவண்ணம் இருந்தது. அது ஒரு நரிகள் நீதிமன்றம் என்பதனை உணர்ந்தது. "போயும் போயும் நரிகளிடம் நீதி கேட்க வந்தேனே! என்று தாரா வருந்தியது. சிறிது நேரத்தில் நீதிமன்றம் எங்கும் தாராவின் எலும்புகளும் இறகுகளும் பரவுண்டு கிடந்தன.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்அமைந்து
ஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி
(திருக்குறள்)

www.tamilarangam.net

# நிறைகுடம்



அது ஒரு சிறிய கிராமம். அங்கு மிகப் பிரபல்யம் வாய்ந்த பண்டிதர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். சுற்றி இருந்தவர்கள் ஆடாமல் அசையாமல் இருந்து சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பண்டிதர் திறமைசாலி தான். ஆனால் தான் பெரிய படிப்பாளி என்று கர்வம் கொண்டவர். ஒரு கவிதையிலிருந்து சில வரிகளைச் சொல்லி விட்டு, "இந்தக் கவிதையின் கருத்து உங்களுக்குத் தெரியுமா?" என்று கர்வத்துடன் கேட்டார்.

அவ்வூரில் இருந்த சில அறிஞர்கள் விழித்தனர். ஏனெனில் அவர்களுக்கு அதன் உட்பொருள் விளங்கவில்லை. அவர்கள் விழிப்பதைக் கண்டதும் "இங்குள்ள ஒருவருக்கும் இதன் உட்பொருள் விளங்கவில்லையா?" என்று அதே கர்வத்துடன் கேட்டார். சபையில் இருந்த ஒரு தாடிக்காரர் எழுந்து நின்றார். நின்றவர், "நான் சொல்லுகின்றேனே" என்றார்.

www.tamilarangam.net


"எளிய உடையில் எளிமையாகத் தோன்றும் இவரா! இதற்கு மறுமொழி சொல்லப் போகின்றார். இவரைப் பார்த்தால் படித்தவரைப் போல தோன்றவில்லையே?" என்ற இறுமாப்பு பண்டிதருக்கு. அவரைக் கேவலமாகப் பார்த்தார். தாடிக்காரர் பண்டிதர் சொன்ன வரிகளுக்கு மிக அழகாகப் பதில் கூறினார். பண்டிதர் திகைத்து விட்டார். இச்சிறிய கிராமத்தில் எளிமைக் கோலத்தில், இவ்வளவு அறிவுடன்........... பண்டிதர் அமைதியானார்.

அவரை நெருங்கி, "நீங்கள் யார்?" என்று பணிவோடு கேட்டார். தாடிக்காரரும் அமைதியாகவே பதில் கூறினார். "நீங்கள் சொல்லிய கவிதையின் சொந்தக்காரன். என் பெயர் இரவீந்திரநாத் தாகூர்". அவர் யாரென்று நினைக்கிறீர்கள்! இந்தியாவின் தேசியகீதத்தை எழுதியவரும், நோபல் பரிசு பெற்ற இலக்கிய மேதையுமான வங்கக்கவிஞர் இரவீந்திரநாத் தாகூரே தான்.

பிரித்தானியாவில் வெளிவரும் சன் (Sun) பத்திரிகையின் ஒரு நாள் ஆசிரியராக இலங்கையைச் சேர்ந்த கணேஷ் சிற்றம்பலம் (B.SE) என்னும் பதின்மூன்று வயதுச் சிறுவன் இருந்திருக்கின்றான்.

www.tamilarangam.net

# மரக்கொத்தி - Wood-pecker



பறவைகள் பலவிதம். அவற்றின் உணவு, பழக்கங்கள், வாழ்க்கைமுறைகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. மரக்கொத்திப் பறவையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?. நேரில் பார்க்காவிட்டாலும் காட்டுனிலோ, படங்களிலோ பார்த்திருப்பீர்கள். சின்னச்சிறிய அழகான பறவை இது.

ஆண் மரக்கொத்திக்குத் தலையில் அழகான கொண்டை சிவப்பாகக் காணப்படும். தலையின் இரண்டு பக்கங்களிலும் வெள்ளை நிறம். மூக்கு அதாவது அலகின் நுனியிலிருந்து உச்சி பிரித்து வகிடு எடுப்பது போல கறுப்புக் கோடு ஒன்று கொண்டையின் கீழ்ப் பக்கத்தால் சென்று கழுத்தில் மறைந்திருப்பது போல இருக்கும். இறகுகள் அந்தக் கறுப்புக் கோட்டை மறைத்து விடும். ஆனால் அந்தக் கறுப்புக்கோடு பின்னிறகு நுனிவரை காணப்படும். பொன்னிறம், மண்ணிறம், சிவப்பு, மஞ்சள் இப்படிப் பலநிறங்களில் இறகுகள் காணப்படும்.

பெண் மரக்கொத்தியை ஆண் மரக்கொத்தியில் இருந்து வேறுபடுத்திப் பார்ப்பது கஷ்டம். பெண் மரக்கொத்தியின் கொண்டையின் மேற்பாகம் கருமை படர்ந்திருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டையைச் சுற்றியுள்ள இறகுகளில் மேற்பாகம் வெள்ளை நிறமாக இருக்கும். மரக்கொத்திகளின் கால்கள் கருமை கலந்த பச்சை நிறமாக இருக்கும். காலின் விரல்களும் நீண்டு கூர்மையாக இருக்கும். இவைகள் மற்றப் பறவைகளைப் போல கிளைகளிலோ கிளைகள் பிரியும் இடங்களிலோ இருப்பதில்லை. மரத்திலேயே செங்குத்தான தன்மையில், மரத்தோடு ஒட்டி விட்டது போல அமர்ந்து இருக்கும்.

ஒரு மனிதன் தென்னைமரத்தில் ஏறும்போது எவ்வாறு தோற்றமளிப்பானோ, அதேபோலவே மரக்கொத்தியும் மரத்தில் அமர்ந்திருக்கும் போது தோன்றும். தத்தித் தத்தி மேலே செல்லுவதைப் போலவே, மரத்திலிருந்து கீழே இறங்கும்போதும் தத்தித்தத்தி இறங்கும். பட்டையோடு காணப்படும் மரங்களில் தன் கூர்மையான அலகினால் கொத்தித் துளைத்துப் பூச்சி புழுக்களைப் பிடித்துத் தின்னும். மரங்களில் துளையிடும் போது கோடரியால் மரங்களைக் கொத்துவது போல, சத்தம் கேட்கும் படியாக மரத்தைக் கொத்தும்.

மரக்கொத்தியும் கூடு கட்டி வாழ்வதில்லை. மரத்திலேயே துளையிட்டு, உள்ளே குடைந்து தன் வசிப்பிடத்தைச் செப்பனிட்டு அழகாக வைத்திருக்கும். அதற்குள்ளே முட்டைகளை இடும். முட்டைகள் கீழே விழுந்து விடாமல் இருப்பதற்கு வசதியாக இருப்பிடம் அமைந்திருக்கும். முட்டைகள் வெண்மை நிறமானவை. வட்டமாக இருக்கும் அதேவேளையில், ஒருபக்கம் கூரானதாக இருக்கும். பட்டுப்போன மரங்கள், உளுத்துப்போன மரங்களில் இருக்கும் கண்ணுக்குத் தெரியாத சின்னஞ் சிறிய பூச்சிகள், சிறு புழுக்கள் போன்றவற்றை மரக்கொத்தி உண்ணும்.

www.tamilarangam.net



# தனிப் பெருமை

சிட்டுக்குருவிக்குப் பெரிதும் கவலையாக இருந்தது. எவ்வளவு பெரிய மரங்கள், விலங்குகள், செடிகள் எல்லாம் ஆண்டவன் படைத்திருக்கிறான். என்னை மட்டும் சின்னப் பறவையாகப் படைத்து விட்டானே!. பசி எடுத்தால் எவ்வளவு கஷ்டம். காற்றடித்தால் மரத்திலிருந்து கீழே விழுந்து விடுவேன். "இந்த உடம்போடு வாழ்வதை விடச் சாவது பரவாயில்லை" என்று சலிப்புடன் தனக்குள் சொல்லிக் கொண்டே வீட்டுக் கூரையில் வந்து அமர்ந்து கொண்டது.

வீட்டுக்குள் இருந்து வீட்டுக்கார அம்மா வந்தாள். வரும்போதே யாரையோ பேசிக் கொண்டு வந்தாள். "இந்தச் சின்னச் சிட்டுக்குருவி கூட எவ்வளவு சுறுசுறுப்பாக உற்சாகத்துடன் தன் வாழ்வுக்காக உழைக்கிறது. எனக்கும் ஒரு சோம்பேறிப் பிள்ளை இருக்கின்றானே!" இதைக் கேட்ட சிட்டுக்குருவி தன்னைத் தானே ஒருதரம் பார்த்துக் கொண்டது. தனக்கிருக்கும் தனிப் பெருமையை அப்போது தான் அது அறிந்து கொண்டது. உற்சாகத்துடன் சத்தமிட்டவாறே சிறகை விரித்துப் பறந்தது.

www.tamilarangam.net

## சார்லிசப்ளின்

"The kid" படம் பெற்றுத் தந்த வெற்றி மகத்தானது. அந்த வெற்றி சார்லியை மிகவும் மகிழ்ச்சி கொள்ள வைத்தது. அதேவேளையில் இன்னொரு மகிழ்ச்சியான செய்தியும் சார்லிக்குக் கிடைத்தது. லண்டனில் மனநலன் குன்றிப் போயிருந்த தாயாரான ஹன்னாசப்ளின் குணமாகி விட்டார் என்பது தான். தனது காரியதரிசியை லண்டனுக்கு அனுப்பித் தன்னோடு வைத்திருக்கச் சார்லி விரும்பினார்.

கப்பலில் பிரயாணம் செய்த ஹன்னாவை அறிந்து கொண்ட கப்பல் மாலுமிகள், துறைமுக அதிகாரிகள் "உலகம் புகழும் சார்லிசப்ளினின் தாயாரா நீங்கள். உங்களைச் சந்தித்துக் கொண்டதில் மகிழ்ச்சி" என்று வரவேற்றனர். "அவன் என் மகன் தான்" என்று பெருமையுடன் கூறிக் கொண்டார் அன்னை. பச்தேனா புகையிரத நிலையத்தில் வந்திறங்கிய அன்னையை - சிட்னியும் சார்லியும் மகிழ்ச்சியோடு கட்டித் தழுவிக் கொண்டார்கள்.

அம்மா பூரணமாகக் குணமடையவில்லை என்பதை அவர் செய்கைகள் சில வெளிப்படுத்தின. ஆனாலும் சிகிச்சையில் பெருமளவுக்கு முன்னேற்றம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிந்தது. தன் வீட்டுக்குப் பக்கத்திலேயே தன் அன்னைக்கும் தனியான வீட்டை எடுத்துக் கொண்டார் சார்லி. அவரைக் கவனித்துக் கொள்ளப் பிரத்தியேகமாகத் தாதி ஒருவரையும் நியமித்துக் கொண்டார்கள் பிள்ளைகள் இருவரும். நேரம் கிடைக்கும் வேளைகளில் எல்லாம் சிட்னியும் சார்லியும் அன்னையைக் காணச் செல்வார்கள்.

அன்னையும் சில வேளைகளில் ஸ்ருடியோவிற்குச் செல்வார். தான் நடித்த படங்களைத் திரையில் போட்டுக் காண்பிப்பார் சார்லி. அன்னையை மனம் கோணாதவாறு அவரைச் சந்தோஷமாக வைத்திருக்கச் சார்லி விரும்பினார். லாஸ்ஏஞ்சலஸ் நகரத்தில் உள்ள கடைகளுக்குச் சென்று தனக்குப் பிடித்தமானவற்றை வாங்கிக் கொண்டு வருவார் அம்மா. சார்லியின் கணக்குக்கு வரும் ரசீது (பில்) . பணம் சுமைக்கமேற்படாமல் கடைகளுக்குக் கிடைத்து விடும். இது வழக்கமாக நடைபெறும் நிகழ்ச்சி.

ஒருமுறை ஹன்னா புடவைக் கடை ஒன்றிற்குச் சென்று நிறையத் தனக்குப் பிடித்தமான பட்டுத்துணிகளை வாங்கிக் கொண்டு வந்தார். ரசீதுடன் கடையின் முதலாளியே வந்திருந்தார். சார்லி திகைத்துப் போய் விட்டார். "அம்மா இவற்றை என்ன செய்யப் போகிறார்?. அவற்றைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருப்பி எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டார். வீட்டுக்கு வந்து கொண்டிருந்த சார்லிக்கு கடந்தகாலம் ஞாபகத்திற்கு வந்தது.

தன்னிடம் இருந்த ஒரேயொரு பட்டுக் கவுனைப் பிரித்து, தனக்கும் அண்ணனுக்கும் உடை தைத்துத் தந்து விட்டு, உடுத்தியிருந்த பழைய கிழியல் ஆடையையே திரும்பவும் உடுத்திக் கொண்ட தூய்மையான அன்னையல்லவா?. எங்களுக்காக தன்னைப் பற்றிக் கவலை கொள்ளாமல், எங்களுக்காகவே வாழ்ந்த அன்னைக்கு ஈடாக நாம் எதைச் செய்து விடப்போகின்றோம்............ .சார்லியின் கண்கள் தாயின் மேற் கொண்ட பாசத்தினால் நீரைச் சொரிந்தன.

பழைய வாழ்வினை மறக்காத இயல்பும், தாயின் மேற் கொண்ட பாசமும் அவரால் சில நிமிடங்கள் எதுவுமே செய்யத் தோன்றவில்லை. வீட்டுக்கு வந்ததும் கடைக்காரரிடம் தொடர்பு கொண்டார். " துணிகளை எடுத்துச் செல்ல வேண்டாம் . பணம் அனுப்பி விடுகிறேன்." —தொடரும்—

மனிதனின் பெருமையும், சிறுமையும் அவனவன் இதயத்துக்குள்ளே இருக்கின்றன.

— -சீனப் பழமொழி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியா (India)



இந்து சமுத்திரத்தில் இருக்கும் ஒரு நாடு இந்தியா. துணைக் கண்டம் எனவும், தீபகற்பம் என்றும் அழைக்கப்படுகின்றது. இது வட மேற்கில் பாகிஸ்தானையும், வட கிழக்கில் இமயமலைத் தொடர்களையும், கிழக்கில் (பங்களாதேஷ்) வங்காள தேசத்தையும், தெற்கிலும் மேற்கிலும் இந்து சமுத்திரத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது. இதன் பரப்பளவு 3,185,025 சதுர மீற்றர். தலைநகரம் புதுடில்லி. இங்கு வாழும் மக்கள் தொகை 750.9 மில்லியன் ஆகும். உலகின் சனத்தொகை கூடிய நாடுகளில் இதுவும் ஒன்று.

போத்துக்கேயரான வாஸ்கொட காமா கப்பலில் 1498இல் இந்தியாவிலுள்ள (கோவா) கள்ளிக்கோட்டையை அடைந்தார். அதன் பின் இந்தியா போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர் ஆகிய நாட்டவரின் குடியேற்ற நாடாக இருந்தது. 15.8.1947இல் சுதந்திரம் அடைந்தது. அயலில் உள்ள அந்தமான்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிக்கோபார் தீவுகளின் வெளிநாட்டுப் பாதுகாப்பை இந்தியா கண்காணிக்கிறது.

உலகிலேயே மிக உயரமான இமயமலைத் தொடர் (8846 மீற்றர்) இங்குதான் இருக்கிறது. இதைவிடக் காரக்கோரம், இந்துக்குஸ், சுலைமான், நீலகிரி போன்ற மலைத் தொடர்களும் உள்ளன. இந்து, கங்கை, பிரமபுத்ரா, ஐராவதி போன்ற நதிகள் உள்ளன. ராஜஸ்தானத்தில் பாலைவனமும் (தார்) உள்ளது.

இந்தியாவில் 20க்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. எழுத்தில் இல்லாமல் இருக்கும் மொழிகள் பல இருக்கின்றன. 25 மாநிலங்களும், மாநிலங்களுக்கான தனித்தனி ஆட்சியும், மத்திய அரசு ஆட்சியும் உள்ளன. பலதரப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். இந்தோ.ஆரிய இனம், திராவிட இனம், மொங்கோலிய இனம், போன்ற இனங்களைச் சேர்ந்தவர்கள் இந்தியாவில் வாழ்கிறார்கள். இந்து சமயம் (வைணவம், சாக்தம், வீர சைவம், பிராமணீயம், போன்ற பல பிரிவுகள்) , கிறீஸ்துவம், இஸ்லாம், சீக்கியம், எனப் பல சமயங்கள் உள்ளன.

அரிசி, பருத்தி, தேயிலை, பருப்பு வகைகள், வாசனைத் திரவியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாட்டுப்பண்ணை, இரும்பு உற்பத்தி, நிலக்கரி எடுத்தல், புடவை நெசவு, இரசாயனம், போன்ற தொழில்கள் நாட்டின் முதன்மையான தொழில்களாக இருக்கின்றன.

–நிர்மலா பரமசிவம்–

www.tamilarangam.net

## வினாவிடைப் போட்டி:

1.கழித்தல் அடையாளத்தை (–) உலகுக்கு அறிமுகம் செய்தவர்கள் இவர்கள்.

இஸ்லாம், பத்திரிகை, தாளம்பூ, வல்லினம், பயம், மலர்ச்சி.

2. ஓவியரான இவரின் கண்டு பிடிப்புகள் பல. நிமிடம் காட்டும் கடிகாரம் கூட இவரின் கண்டு பிடிப்புத்தான்.

லிகிதம், சயனம், மன்னார், கர்ச்சனை, பட்டோலை, பட்டாளம், பல்லவி, மன்னல், சித்திரை.

3. உலகத்திலேயே பணக்கார நாடுகளில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட நாடு இது?

இலட்சியம், பக்கம், ஸ்பானியா, பாசம், மிச்சம், பேராசை, போர், சொர்க்கம்.

4. இந்து சமுத்திரத்தின் முத்து என்று நாடு பிடித்தோர்களால் (ஐரோப்பியர்களால் ) வர்ணிக்கப்பட்ட நாடு இது.

இன்பம், பலரகம், குங்குமம், செயற்கை.

5. ஐரோப்பாக் கண்டத்தில் சனத்தொகை கூடுதலாக உள்ள நாடு இது?

நெற்பயிர், பதனீர், உயிர், பல்லாக்கு, பந்தயம், துணைவன்.

முடிவு திகதி: 7.4.97



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தற்பெருமை



ஆற்றங்கரை ஓரத்தில் ஆலமரம் ஒன்று நிழல் பரப்பிக் கொண்டு நின்றது. பல கிளைகளுடன் விழுதுகளுடன் பெருமையுடன் செழித்து நின்றது. அது தன் உருவத்தையும் வளர்ச்சியையும் கண்டு கர்வம் கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் நாணற்புல் வளர்ந்திருந்தது. நாணற்புல்லைப் பார்க்கும்போது ஆலமரத்துக்குச் சிரிப்பாக இருக்கும்.

"நாணற்புல்லே, நீ எவ்வளவு சிறியவனாக இருக்கிறாய். என்னைப் பார். என் உடலைப்பார்.

www.tamilarangam.net

எவ்வளவு பலசாலியாக இருக்கிறேன். யாரையும் எதிர்க்கும் சக்தி எனக்குண்டு. நீயோ மனிதர்களின் கால்களில் மிதிபட்டு, அற்ப வாழ்க்கை வாழுகிறாய். நீரில் அலைந்து கொண்டும் பெரும் மழையில் தள்ளாடியபடியும் கஷ்டப் படுகிறாய்." என்று ஏளனம் செய்தது.

ஓர் இரவு. திடீரென்று பெருமழை பெய்தது. காற்றுப் பலமாக வீசியது. நாணற்புல் தலை சாய்த்து விழுந்து கிடந்தது. விடிந்தது. நாணற்புல் தலையை நிமிர்ந்து நோக்கியது. ஆலமரம் இருந்த இடம் வெறிச்சோடி இருந்தது. ஆலமரம் அலங்கோலமாக விழுந்து கிடந்தது. நாணற்புல்லுக்குக் கவலையாக இருந்தது. ஆலமரத்தின் தற்பெருமையால் அதற்கு ஏற்பட்ட நிலையை எண்ணிப் பெருமூச்சு விட்டது.

"தற்பெருமை தாழ்வை உண்டாக்கும்"

---


வன்முறையால் வென்றதில் பாதியை மனிதர்கள் இழந்து விடுகிறார்கள். வாதத்தில் வென்றது தான் என்றும் நிலைத்து நிற்கும்.

-வென்டெல் பிலிப்ஸ்-

---

www.tamilarangam.net

# வாகனங்களின் கதை



நீரில் செல்வதற்குத்தான் எத்தனை விதமான படகுகள், நீர் மூழ்கிக் கப்பல்கள் வந்து விட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை நீரிலும் நிலத்திலும்தான் மனிதன் ஆதிக்கத்தைச் செலுத்தினான். வானில் பறக்கும் பறவைகளை மனதில் நிறுத்திக் கொண்டான். வானத்துச் சிந்தனைகளைத் தேக்கினான். இதற்கான முதல் நிகழ்ச்சியை ரைட் சகோதரர்கள் தொடக்கி வைத்தார்கள். இன்றைக்கு ஜெட் விமானம் வரையான கண்டு பிடிப்புகளுக்கு முதற்கர்த்தாக்கள் இவர்கள் தான்.

காற்றிலே இலேசாகச் செல்லக் கூடிய தன்மையில் இருப்பவை ஒருவகை. நவீன விமானங்கள் இரண்டாவது வகை. காற்றிலேயே

www.tamilarangam.net

மிதக்கும் தன்மை கொண்டவை றப்பரால் மூடப் பட்டவையாகும். காற்றின் நிறையை விடக் குறைவான நீராவியினால் இயக்கப் படுகின்றன. இவைகள் வானிலை ஆராய்ச்சிக்கு மட்டுமே கூடுதலாகப் பயன்படுகின்றன. மனிதர்களை ஏற்றிச் செல்ல ஒருபோதும் பயன்படுவதில்லை.

போக்குவரத்துக்கு உதவும் வான்கூண்டு (Air ship) பயணிப்போர், பொருட்கள் ஆகியவற்றை ஏற்றிச் செல்லக் கூடியது. விமானத்தைப் போல இல்லாமல் இவை காற்றுவெளியில் நிலையாக நிற்கக் கூடியவை. நவீன ரக விமானங்கள் காற்றை விடவும் நிறை கூடியவை. கடந்த முப்பது வருடங்களுக்குள் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. சிறிதானதும், சிலரை மட்டுமே (இருவர், நால்வர்) ஏற்றிச் செல்லக் கூடியதிலிருந்து, நானூறு, ஐநூறு பேர்வரை ஏற்றிச் செல்லும் பலவித வடிவமைப்புக்களுடன் விமானங்கள் இருக்கின்றன.

பொதுவாக இவ்விமானங்கள் அனைத்தும், ஒரேவிதமான கட்டமைப்புக் கொண்டவை. உருவத்திலும் யந்திரங்களின் எண்ணிக்கையிலும் வேறுபடுகின்றன. போர்க் காலங்களில் பாவிப்பதற்கு ஏற்ற முறையில் சிறப்பான விமானங்களும் இருக்கின்றன.

—முற்றும்—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

முடிவு திகதி :7.4.97

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வா | ச | ல் | ப | டி | ட் | சு | ணை | ன் | அ |
| ன | கரை | அ | ணி | ம் | ன் | ள | ப | ந | ர |
| வி | ள | ம் | பு | பு | ரு | கு | றை | க | வு |
| ல் | மெ | த் | தை | ப் | யொ | ங் | க | ல் | த |
| ல | ய | ம் | ய | கா | து | ம் | ப | ம் | க |
| ங் | வு | ப | ல் | பு | ம் | ன | வ | ர | தை |
| க | ர | க | ர | ப் | பு | வ | ர | வா | னி |
| ம் | க | ன | தி | ற | மை | பு | ம் | ர | வ |
| ப | ட | ங் | கு | தி | வி | ம் | ர | ஆ | டு |
| ம் | ல் | க | ரை | ம | ழி | பா | த | ம் | பா |

www.tamilarangam.net



## பத்திரிகை

உலக விஷயங்களை அறிந்து கொள்ள இக்காலத்தில் பலவசதிகள் உள்ளன. செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி போன்றன உதவியாய் இருக்கின்றன. உலகில் ஒரு பக்கத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் மறுபக்கத்தில் இருப்பவர்கள் அறிய முடிகின்றது. செய்தித்தாள் (பத்திரிகை) இதில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்தச் செய்தித்தாள்கள் எப்படி உருவாகின என்று பார்ப்போம்.

ரோமன் நாட்டவரே முதல் செய்தித்தாளை வெளியிட்டவர்கள் ஆவார்கள். (Akta Diurna) அக்டா டியூர்னா என்பதே அவர்கள் வெளியிட்ட பத்திரிகையாகும். "வெல்லம்" (Vellum) என்னும் 'ஆட்டுத்தோலினாலான கடதாசியில் போர்ச்செய்திகள், தேர்தல்விபரங்கள், அரசாங்கத்தின் இதர செய்திகளை எழுதி நகரின் பொது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடங்களில் மாட்டி விடுவார்கள். மக்களைப் பாதிக்கும் விடயங்கள் அதில் பொறித்திருந்தால், அதை மக்கள் எடுத்துக் கிழித்துத் துஷ்பிரயோகம் செய்யாமல் அருகே காவல்காரரையும் நிறுத்தி விடுவார்கள்.

மத்திய காலத்தில் பத்திரிகை எதுவும் கிடையாது. நாட்டுக்கு நாடு திரியும் நாடோடிகளையே நம்பி இருக்க வேண்டி இருந்தது. இவர்களை (Trouba dours) ட்ரோபடோர்ஸ் என்றழைத்தனர். ஊர் சுற்றும் இவர்கள் ஒரு இடத்துக்கு வந்தால் அவருக்கிருக்கும் மரியாதையே தனியானது. இவருக்கான உணவையும், தங்குவதற்கான இடவசதியையும் அந்த இடத்தில் உள்ளவர்கள் செய்து கொடுப்பார்கள். இவர்களும் அந்த இடத்தில் வசிப்பவர்களுக்குத் தான் சென்ற இடங்களில் தான் கண்ட கேட்ட செய்திகளை அவர்களுக்குச் சொல்லுவார்.

ஹார்ப் என்னும் இசைக்கருவியை இசைத்துக் கொண்டு பாடலிலேயே தான் கண்டறிந்தவற்றைக் கூறுவார். செய்களைக் கூட்டியும், குறைத்தும் புனைந்தும் இவர்கள் சொல்லுவார்கள். பிரித்தானியாவை ரோமம இராச்சியம் ஆண்ட காலத்திலிருந்து, நாட்டுக்கு ஏற்படும் அபாயங்களை அறிவிக்கும் ஒருவகைச் செய்தி முறை உருவாகியது. நகரின் உயரமான இடங்களில் (குன்றுகள் உட்பட) பெரு நெருப்புக் கொளுத்தி அறிவிப்பது. இதை (Beacon Fire) "பேக்ன்ஃபயர்" என்றழைத்தனர். இங்கிலாந்தைத் தாக்கும் நோக்கத்துடன் ஸ்பானியக் கப்பலான "ஆர்மெடா" வந்தபோது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கிலாந்தின் கடற்கரைப் பகுதிகளில் உள்ள மலைகளிலும், உயரமான இடங்களிலும் நெருப்பு எரிப்பதன் மூலம், எலிசபெத் மகாராணிக்குத் தெரியப்படுத்தினார்கள். ஸ்பானியப் போர்க்கப்பலைச் சிதறடித்து பிரித்தானியா வெற்றி கொண்டதைச் சரித்திரம் கூறுகின்றது.

செய்தித்தாள் வழக்கத்து வந்த பின்பும் கூட, ஏழை மக்கள் (Town Crier) "டவுன் கிரையர்" எனப்படும் செய்தி அறிவிப்பவனை நம்பியே செய்திகளை அறிந்தனர். நமது நாட்டிலும் முரசு அறைந்து செய்திகள் கொடுப்பது இக்காலத்திலும் சில இடங்களில் வழக்கத்தில் இருக்கின்றது. விஞ்ஞான முன்னேற்றம் கண்டு, வளர்ச்சியடைந்த காலத்திலும் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து நாடுகளின் சில பகுதிகளில் இன்றும் இது வழக்கத்தில் இருக்கிறது.

இன்று பத்திரிகைப்பணி மிகச் சிறந்த கலையாகவே மதிக்கப் படுகின்றது. எங்கே என்ன சம்பவமானாலும் அங்கே பத்திரிகை நிருபர் காணப்படுகின்றார். தொலைபேசி மூலம் செய்திகளை உடனுக்குடன் பத்திரிகை அலுவலகத்துக்கு அறிவிப்புச் செய்கிறார். செய்திகள் உடனுக்குடன் மக்களைச் சென்றடைகின்றன. தகவல் தொடர்புகளும், செய்திகளை உடனுக்குடன் தெரியப்படுத்தும் நவீன வசதிகள் இன்று பெருகி விட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எண் வரிவடிவம்

உலகில் இன்று எல்லா நாடுகளிலும் அரபு எண் வரிவடிவங்களே பின்பற்றப் படுகின்றன. உரோமர்களுக்குத் தனியான வரிவடிவங்கள் உண்டு. அது போலவே, எமது மொழியிலும் உண்டு.

அரபு எண் வரிவடிவம்:
1. 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10.

உரோம எண் வரிவடிவம்
i ii iii iv v vi vii ix x (L -50) (C-100) (D-500) (M-1000)

தமிழ் எண் வரிவடிவம்
க, உ, ங, ச, ரு, சா, எ, அ, கூ, க0

பறவைகளிலேயே மிகச் சிறிய முட்டைகளை இடும் பறவை ''ஹம்மிங் பேட்'' என்னும் பாடும் பறவை ஆகும். இதன் முட்டையின் நீளம் 6 மி.மீ ஆகும். இப்பறவை உடம்பைத் திருப்பாமலே பின் பக்கமாகவும் பறக்கக் கூடியது.

www.tamilarangam.net

அன்பான சந்தாதாரர்களே!!

சென்ற ஆண்டைப் போலவே இம்முறையும் எம் இதழ்களுக்கான சந்தாப் பணத்தை அனுப்பி வைக்கும்படி பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம். சிறுவர் அமுதம் இதனைப் புதிதாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்களுக்கு, இதற்கான சந்தா விபரத்தையும் விலாசத்தையும் கொடுத்து உதவும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

வருடச் சந்தா 40 D.M
Konto Nr. 1146023746
Bank: Kreissparkasse Köln
Tel.:02271\66527

தராசின் நாக்கு எப்படிப் பொருட்களின் நிறையைச் சமன் செய்கிறதோ, அது போலவே, நடுவுநிலைமை என்பது எந்தப் பக்கமும் சாராது செயல்பட வேண்டும். நரியைப் போன்றவர்களுக்கு நடுவு நிலைமை ஒருபோதும் ஒத்து வராது.

–நிர்மலா பரமசிவம்–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்